# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# முதல் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - பொருமாநீள்படை
## ஈச்வரன் நிர்ஹேதுகமாகத் தன்னை உபகரிப்பவன் என அருளிச் செய்தல்

** பொரு மா நீள் படை * ஆழி சங்கத்தொடு *
திரு மா நீள் கழல் * ஏழ் உலகும் தொழ **
ஒரு மாணிக் குறள் ஆகி நிமிர்ந்த * அக்
கரு மாணிக்கம் * என் கண் உளதாகுமே 1

கண்ணுள்ளே நிற்கும் * காதன்மையால் தொழில் *
எண்ணிலும் வரும் * என் இனி வேண்டுவம்? **
மண்ணும் நீரும் * எரியும் நல் வாயுவும் *
விண்ணுமாய் விரியும் * எம்பிரானையே 2

எம்பிரானை * எந்தை தந்தை தந்தைக்கும்
தம் பிரானை * தண்தாமரைக் கண்ணனை **
கொம்பு அராவு * நுண்ணேர் இடை மார்வனை *
எம்பிரானைத் தொழாய் * மட நெஞ்சமே! 3

நெஞ்சமே நல்லை நல்லை * உன்னைப் பெற்றால்
என் செய்யோம்? * இனி என்ன குறைவினம்? **
மைந்தனை * மலராள் மணவாளனை *
துஞ்சும் போதும் * விடாது தொடர் கண்டாய் 4

கண்டாயே நெஞ்சே! * கருமங்கள் வாய்க்கின்று * ஓர்
எண் தானும் இன்றியே * வந்து இயலும் ஆறு **
உண்டானை * உலகு ஏழும் ஓர் மூவடி
கொண்டானை * கண்டு கொண்டனை நீயுமே 5

நீயும் நானும் * இந்நேர் நிற்கில் * மேல் மற்றோர் *
நோயும் சார் கொடான் * நெஞ்சமே! சொன்னேன் **
தாயும் தந்தையுமாய் * இவ்வுலகினில் *
வாயும் ஈசன் * மணிவண்ணன் எந்தையே 6

எந்தையே என்றும் * எம்பெருமான் என்றும் *
சிந்தையுள் வைப்பன் * சொல்லுவன் பாவியேன் **
எந்தை! எம்பெருமான்! என்று * வானவர்
சிந்தையுள் வைத்துச் * சொல்லும் செல்வனையே 7

செல்வ நாரணன் என்ற * சொல் கேட்டலும் *
மல்கும் கண் பனி * நாடுவன் மாயமே **
அல்லும் நன்பகலும் * இடைவீடு இன்றி *
நல்கி என்னை விடான் * நம்பி நம்பியே 8

** நம்பியைத் தென்குறுங்குடி நின்ற * அச்
செம்பொனே திகழும் * திருமூர்த்தியை **
உம்பர் வானவர் * ஆதி அஞ்சோதியை *
எம்பிரானை * என் சொல்லி மறப்பனோ? 9

மறப்பும் ஞானமும் * நான் ஒன்று உணர்ந்திலன் *
மறக்கும் என்று * செந்தாமரைக் கண்ணொடு **
மறப்பற என் உள்ளே * மன்னினான் தன்னை *
மறப்பனோ? இனி * யான் என் மணியையே 10

** மணியை வானவர் கண்ணனைத் * தன்னதோர்
அணியை * தென்குருகூர்ச் சடகோபன் ** சொல்
பணி செய் ஆயிரத்துள் * இவை பத்துடன் *
தணிவிலர் கற்பரேல் * கல்வி வாயுமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---